**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08042024-7772

Volume: 8

Issue: 4

Month: April

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 17.01.2024

Accepted: 25.04.2024

Published: 01.04.2024

Citation:
Singaravelan, P. (2024). Personality Thoughts in Thirukkural. *Shanlax International Journal of Tamil Research*, 8(4), 141–145.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i4.7772

*Corresponding Author:
singaravelanb74@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Personality Thoughts in Thirukkural

**P. Singaravelan**
*Assistant Professor, Centre for Higher Studies in Tamil*
*Government Arts College, Melur, Tamil Nadu, India*
*https://orcid.org/0009-0005-9213-419X*

**Abstract**
*Madurai Thirukkural Manimozhiyan, who praises Thiruvalluvar as "Thamizhan Thirukulam Thamizh Thaai Thiruvazhil Thamizh Thiruvalluvanar – Kiliye Thamizh Piranthaaraadi" – says Madurai Thirukkural Manimozhiyan. Bharathiar, the great poet of the twentieth century, endorses this. As Prof. Thaninayagadigal puts it, "Valluvar has written his book in a manner that is suitable for the benefit of all the world and all people, without any reference to Tamil or Tamil country. The poet who lived centuries ago did not give place to narrow thoughts like caste, religion, race, language, color etc. Valluvam is celebrated as Ulagapodumarai. Let us see the personality thoughts in this book.*
***Keywords: Valluvam, Thiruvalluvar, Personality, Freud, Ulagappodumarai***

# திருக்குறளில் ஆளுமைச் சிந்தனைகள்

***முனைவர் பா. சிங்காரவேலன்***
இணைப்`பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
அரசு கலைக்கல்லூரி, மேலூர்

***ஆய்வுச்சுருக்கம்***

*“தமிழன் திருக்குலத்தில் தமிழ்த்தாய் திருவயிற்றில் தமிழ்த்திருவள்ளுவனார் - கிளியேதமிழாய்ப் பிறந்தாரடி” - எனத் திருவள்ளுவருக்குப் புகழாரம் சூட்டும் திருவள்ளுர் கிளிக்கிண்ணி என்கிறார் மதுரை திருக்குறள் மணிமொழியன். இதனை வழி மொழிவது போல் இருபதாம் நூற்றாண்டுப் பெரும் புலவர் பாரதியார்.*

*வள்ளுவன் தன்னைஉலகினுக்கே-தந்து*
*வான்புகழ் கொண்டதமிழ்நாடு*

*எனத் திருவள்ளுவரைப் போற்றிப் பாடுகிறார்.*

*பேராசிரியர் தனிநாயக அடிகள் குறிப்பிடுவது போல தமிழோ, தமிழர் நாடோ என்ற குறிப்பேதும் இல்லாமல், எல்லா உலகிற்கும், எல்லா மக்களுக்கும் பயன்படும் முறையில் உலகெலாம் தழுவுவதற்கு உரிய பான்மையில் வள்ளுவர் தம் நூலையாத்திருப்பது ஒரு சிறப்பாகும். பலநூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த கவிஞர் சாதி, மதம், இனம், மொழி, நிறம் முதலான குறுகிய எண்ணங்களுக்கு இடம் தராமல், உலகோர் மனம் உவக்கும் வண்ணம். உலகப் பொதுமறை என வள்ளுவம் சிறப்பிக்கப்படுகிறது. இந்நூலில் இடம்பெறும் ஆளுமைச் சிந்தனைகளைக் கட்டுரையில் காண்போம்.*

***முக்கியச்சொற்கள்:*** *வள்ளுவம், திருவள்ளுவர், ஆளுமை, ஃபராய்டு, உலகப் பொதுமறை*

## ஆளுமை

‘personality’ என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம் “ஆளுமை” என்பதாகும். இச்சொல் “personare” என்கிற இலத்தின் சொல்லிருந்து பிறந்ததாகும். பேர்சோனே என்றால் முகமூடி (Mask) என்று பொருள். கிரேக்க ரோமானிய நாடக நடிகர்கள் தம் முகத்தை மூடியபடி நடித்த செயலையும், முகமூடியையும் குறிப்பதாக இருந்தது. ஒரு மனிதன் தன்னிலிருந்து மாறுபட்டுப் பிறிதொரு கதாபாத்திரமாக மாறிய நிலையைக் குறிப்பதாக இச்சொல் உருப்பெற்றது. ஆளுமை என்பதற்கு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரையறை இல்லை. எனினும் உளவியல் நோக்கில் ஆளுமை என்பதற்கு ஒருவரின் ஒழுங்கமைந்த இயங்கியல் பண்புகளையும், அவை தோற்றுவிக்கும் நடத்தைகளையும், உணர்வுகளையும், சிந்தனைகளையும் குறிக்கிறது என்கிறார். நா. இளங்கோ. மேலும் ஆளுமைதிறன் சிறப்பாய் உள்ளவர்களால் மட்டும் நெருக்கடியான சூழலிலும் சரியான முடிவை எடுக்க இயலும். ஆளுமை என்பது 1.உருவ ஆளுமை (1. உடை, 2. உடல் நலம், 3. தோற்றப் பொலிவு) ஆகும் 2. உள்ள ஆளுமை என்பது மனப்பான்மை மற்றும் தலைமைப் பண்புகளால் தீர்மானிக்கப்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்பவர் சிறு குழுவை வழி நடத்துபவர், மாணவர்களை வழி நடத்தும் ஆசிரியர், ஆசிரியர்களை வழி நடத்தும் தலைமை ஆசிரியர், ஊழியர்களை வழி நடத்தும்

வங்கி மேலாளர் மாவட்ட, நிர்வாகத்தை வழி நடத்தும் முதலமைச்சர், நாட்டை வழிநடத்தும் பிரதமர் என அனைவரும் ஆளுமை திறன் படைத்தவர்களாக இருப்பர். ஒரு நபர் தன்னுடைய தனித்திறனால், உயர்ந்த இடத்தைப் பெறுதலும் ஆளுமையாகும். எனவே ஆளுமை என்பது பறந்து விரிந்த பண்புகளை உடையதாகும்.

## திருவள்ளுவரின் படைப்புகளில் ஆளுமைத் திறன்

ஆளுமை உணர்வு அனைத்து உயிர்களிடமும் காணப்படுகின்றது. அது அறிவு உள்ள மனிதனிடம் மேலோங்கி நிற்கிறது என்கிறார் யுங். முழுமையான ஆளுமையை தற்பவம் (Self) என்று புலப்படுத்துகிறார்.

ஃபிராய்டு ஆளுமை குறித்து உணர்த்துகையில் நடத்தையிலும் நடத்தைகளுக்கான காரணிகளைக் கண்டறியும் போக்கில் ஆளுமை உளவியல் தோன்றிற்று என்பார். நனவிலியே மனித ஆளுமையைத் தீர்மானிக்கிறது என்று ப்ராய்டு குறிப்பிடுகிறார். குழந்தைப்பருவ அனுபவங்கள் மனித ஆளுமையின் பெரும்பங்கு வகிப்பதாகக் குறிப்பிடுகிறார். இப்படி அறிஞர்கள் ஆளுமை குறித்து பல விதமான கருத்துக்களை முன்வைக்கின்றனர். எல்லாப் பொருளும் இதன் பால் உள என்று திருக்குறளைச் சிறப்பிக்கின்றார். அத்தகைய திருக்குறளைக் காந்தியடிகளுக்கு அறிமுகம் செய்து வைத்தவர் டால்சுடாய். அகிம்சை தத்துவத்தின் அடிப்படையை உணர்த்தியது திருக்குறள். அதனால் தான் காந்தியடிகள் மற்றொரு பிறவி என்று ஒன்று இருந்தால் தமிழராகப் பிறக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார் என்பதைக் கவிஞர் இரா. இரவி முக நூலில் பதிவு செய்துள்ளார்.

### கல்வி

ஆளுமை குறித்து பேசுகிற தற்காலத்து அறிஞர்களும், மனித நடத்தைகளைப் பற்றியே பகுத்தும் வகுத்தும் விளக்குகின்றார். அவற்றின் உள்ளார்ந்த பொருளாக மனித ஒழுக்கமும், ஒழுக்கத்தைக் கற்றுத்தரும் கல்வியை முன்வைக்கின்றனர். கல்வி பரவலாகாத காலச்சூழலில் வாழ்ந்த வள்ளுவர், கல்வி தான் மனிதனை உயர்த்தும் ஏணிப்படி என்கிறார். கல்வி அறிவு அற்றவன் முகத்தில் இரண்டு புண்களை உடையவன் என்கிறார். இதனை

**கண்ணுடையவர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையவர் கல்லா தவர் (393)**

என்ற குறளோடு ஒப்பிட்டு அறியலாம்.

### எண்ணம்

ஆளுமைத் திறன் உடையவர்கள் எப்போதும் நிகழ்காலத்தின் மீது அதிகம் நம்பிக்கை வைத்துச் செயல்படுவர். இறந்த கால நிகழ்வின் மூலம் சில படிப்பினைகளைப் பெறுவர். எதிர்காலம் குறித்த திட்டமிடல் அவர்களிடம் அதிகமாக இருக்கும். அவ்வாறு திட்டமிட்டவர்களில் முறையான பயிற்சியும், முயற்சியும் வெற்றிக்கு வித்தாகும். இதனை,

**“எண்ணிய எண்ணியாங்கு எய்தும் எண்ணியார்**
**திண்ணிய வாகப் பெறின்” (666)**

வள்ளுவர் குறிப்பிடுகிறார். திண்ணியர் என்ற சொல் ஆளுமை திறனைக் குறிக்கிறது.

### மன ஒருமைப்பாடு

**“கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்**
**குரிமை யுடைத்திவ் வுலகு” (578)**

நாம் எடுத்துக் கொண்ட செயல்பாட்டில் இருந்துமாறாமல்மனஒருமைப்பாட்டோடு செயல்படுபவதற்கு உலக நன்மைகள் அனைத்திற்கும் உரிமை உடையவர் ஆவார்கள் என்கிறார் வள்ளுவர். திண்ணிய நெஞ்சம் பெறுவதற்கு மன ஒருமைபாடு தேவை.

**சொல்**

**வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல் (291)**

பிறருக்கு எள் முனையளவு தீமையும் ஏற்படாத ஒரு சொல்லைச் சொல்வதுதான் வாய்மை எனப் பொருள் உரைக்கிறார். முத்தமிழ் அறிஞர் கலைஞர். உண்மை, நேர்மை, சுய ஒழுக்கம், கட்டுப்பாடுகள் நிறைந்த ஒன்றையே வாய்மை என்றழைப்பர். மேலும் பயனில் சொற்களைச் சொல்லக் கூடாது. இதனை

**சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க**
**சொல்லிற் பயனிலாச் சொல் (200)**

என்கிறார் வள்ளுவர்.

**அன்பு**

அன்பு என்றும் நிரந்தரமானது. பசுமையான நினைவுகளோடு வலம் வருவது. அன்பு செலுத்தி உறவாடி இருந்தவர்கள் சில காலம் பிரிந்து மீண்டும் சந்திக்கும் போது அவர்களைக் கண்ட அளவில் அவர் கண்ணில் துளிர்க்கும் கண்ணீரே அதனை வெளிப்படுத்தும். இதனை

**அன்பிற்கு உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர்**
**புன்கணீர் புசல் தரும் (71)**

என்கிறார். மேலும் அன்புடன் கூடிய உடலே உயிருடன் கூடிய உடல் என்றும், அன்பில்லாதவர் உடம்பு எலும்பும் தோலும் போர்த்துக் கட்டிய உயிரிலா உடல் ஆகும் என்கிறார் வள்ளுவர்.

**புலனடக்கம்**

புலனடக்கத்தைப் பற்றிக் குறிப்பிடும் வள்ளுவர் புறவுலகிலிருந்து துயரம் வருகிறது எனில், ஆமை தனது நான்கு கால்களையும், தலையையும் ஓட்டுக்குள் அடக்கிக் கொள்ளும். அது போல மனிதர்களும் தனது ஐம்பொறிகளையும் அடக்கியாளும் திறன் பெற்றால் எக்காலத்திலும், எச்சூழலிலும் மனிதன் தன் ஆளுமை குன்றாமல் பாதுகாப்புடன் வாழ்வர். இதனை

**“ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்**
**எழுமையும் ஏமாப் புடைத்து”(126)**

என்கிறார். எனவே மனிதன் மனம், மொழி, மெய்களால் அடக்கமுடையவராக இருப்பின் வாழ்வில் உயரலாம்.

**முயற்சி**

ஆல்பர்ட் சுவைட்சர் திருக்குறளை “வாழ்வுக்கு உரிய அன்பு நெறியைக் கூறும் உயர்ந்த நூல் உயர்ந்த ஞானத்தைப் புகட்டும் செம்மொழிகளின் தொகுப்பு. இது போல் உலக இலக்கியத்தில் வேறு எங்கும் இல்லை” என்கிறார். இவர்

**“தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்”(619)**

என்ற குறள் தன்னைப் பெரிதும் ஈர்த்தது என்கிறார்.

ஜி.யு.போப் 1886-ல் திருக்குறளை ஆங்கிலத்தில் முழுமையாக மொழி பெயர்த்துள்ளார். இவர் “உலகில் உள்ள பொருட்கள் எல்லாம் மாறுகின்றன. ஒரு நூல் மறைகின்து. ஆனால் திருவள்ளுவருடைய புகழ் மங்கவில்லை. பெருகிக்கொண்டே போகின்றது” என்கிறார்.

**மழை**

வான் சிறப்பைக் கூறிடும் வள்ளுவர்

**விசும்பின் துளிவீழின் அல்லாமல்மற் றாங்கே**
**பசும்புல் தலைகாண் பரிது (16)**

வானில் இருந்து மழைத்துளி விழுந்தால் அல்லாமல் மண்ணில் பசும்புல் முளைத்தலைக் காண இயலாது என்கிறார்.

**வேளாண்மை**

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர் (1033)**

உழவுத் தொழிலின் சிறப்பு உழுதொழில் செய்து, அதனால் உணவைப் பெற்று உண்டு வாழ்பவரே வாழ்பவர் ஆவார். பிறமக்கள் உழவரைத் தொழுதுண்டு மக்கள் பின் செல்வர். இப்படி அறம்,பொருள், இன்பம் என்ற முப்பாலில் உலகோர் கண்டு மகிழ்ந்த

காட்சிகளைப் பல்வேறு கோணங்களில் 133 அதிகாரங்களில் பதிவு செய்திருப்பது வள்ளுவரின் படைப்பாளுமையைக் காட்டுகிறது.

**பெண்**

**"பெண்ணின் பெருந்தக்க யாவுள"**

என்று சிறப்பிக்கும் வள்ளுவர் பெண் தன்னைத்தானே காத்துக் கொள்ளுதல் வேண்டும். வீட்டிற்குள் அடைத்து வைத்து அவளைப் புறவுலகத் தாக்குதலிலிருந்து காப்பாற்றி விடுவோம் என்று கருதுவது மனிதர்களின் மூடத்தனமாகும் என்பதை

**சிறைகாக்கும் காப்பெவன் செய்யும்?மகளிர்**
**நிறைகாக்கும் காப்பே தலை (57)**

என்கிறார். கல்வி அறிவால் திரைகடல் ஓடித் திரவியம் தேடிவரும் பெண்கள் பலர் சுய ஒழுக்கத்தால், கட்டுப்பாட்டால் தம்மைத்தாமே காத்துக் கொள்ளக் கூடியவர்களாக உள்ளனர். மேலும் மனையாள் மாண்பு, பெண்விடுதலை குறித்தும் குறளில் பதிவு செய்துள்ளதைக் காணமுடிகிறது.

**அயலக வாழ்க்கை**

இன்றைக்கு இந்தியர்கள் தாம் கற்ற கணினிவழிக் கல்வியைப் பயன்படுத்தி, பூமிப் பந்தின் ஒவ்வொரு பகுதியினும் சென்று குடியேறிவாழ்ந்து வருகின்றனர். வேற்று நாட்டைத் தம் நாடாகக் கருதுகின்ற மனப்போக்கினைத் தமிழ் மக்களிடம் காணமுடிகிறது. இக்கருத்தை

**யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு (397)**

என வள்ளுவர் தம் குறளில் பதிவுசெய்துள்ளார். வணிகம் வேளாண்மை, கூலித்தொழிலாளர்கள், போர்காரணமாக புலம்பெயர்ந்தோர் எனத் தொடங்கி இன்று இந்தியர்கள் அயலகங்களில் குடியேறியுள்ளதை காணமுடிகிறது.

**மன்னர்**

நாட்டை ஆளும் மன்னன் எத்தகைய ஆளுமை உடையவனாக இருத்தல் வேண்டும் என்பதை

**"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு" (544)**

பெருநிலம் முழுதாளும் ஆட்சியாளன் ஒருவன், தன் குடிகளைத் தழுவி ஆட்சி நடத்துவானேயானால் அவனது வழிகளைப் பின்பற்றி அவன் நாட்டினரே அன்றி உலகோரும் நிற்பர் என உலக சமுதாய மக்கள் அனைவருக்கும் பொதுவான கருத்தை வள்ளுவர் பதிவு செய்துள்ளார். மேலும்,

**ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்**
**நீள்வினையால் நீளும் குடி (1022)**

விடாமுயற்சி, விரிந்த அறிவு என்னும் இரண்டும் கூடிய இடையறாத செயலால், ஒருவனது குடியின் வளமும் பெருமையும் உயரும் என்கிறார். மேலும் மன்னன் காட்சிக்கு எளிய கடுஞ்சொல்லன் அல்லன் (386) ஆகவும், படை, குடி, உணவு, அமைச்சர், நட்பு ஆகிய ஆறும் உடையவனாக இருத்தல் வேண்டும்.

படைப்பாளனின் மனக் கருவறையில் உருவாகிய படைப்பு, பலரும் போற்றும் படியாகவும், காலம் கடந்தும் வாழ்கிறது என்றால், அதைத்தான் திறனாய்வாளர்கள் படைப்பாளுமை என்பர், வள்ளுவர் தான் வாழ்ந்த காலத்தில் நடைமுறையில் இருந்த சமூக அமைப்பை உற்றுநோக்கி, வள்ளுவத்தைப் படைத்துள்ளார்.